OS: 656/2018

Date: 02.03.2026

பெயர்: ராஜா என்கிற ராஜ்மோகன் **(பி.வா.சா.1) ஆஜர்**, **சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி:-</u>**

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

1. 13.10.2025ம் தேதியிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அ-பதிவேடு நகல் **பி.வா.சா.ஆ.14.**

வழக்கு தாக்கல் செய்திருக்கும் சண்முகத்தின் தாத்தா பெயர் என்னவென்றால் சின்னபையன் என்பதாகும். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் என்னவென்றால் அதுவும் சின்னபையன் தான். அ பதிவேடு எதற்காக ஒப்படைத்திருக்கிறேன் என்றால் சர்வே எண்.35/7-ல் உள்ள 12 செண்ட் மற்றும் நிலமும் சர்வே எண் 37/13ல் 5 செண்ட் நிலமும் சின்னபையனுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஒப்படைத்திருக்கிறேன். அந்த 12 செண்ட் சம்மந்தமாக வாதி என்ன பரிகாரம் கேட்டிருக்கிறார் என்றால் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை.

2. 5 செண்ட் நிலம் என்ன ஆனது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 2005ம் ஆண்டு வாதியின் தந்தை கந்தசாமியும், 1ம் பிரதிவாதி வீரமுத்தும், பழனிவேல் மற்றும் சக்திவேல் என்பவர்களுக்கு கிரயத்திற்கு கொடுத்துவிட்டார்கள். அதை வழக்கில் சேர்க்கவில்லை. 2ம் பிரதிவாதி எனது தகப்பனார். அவர் இறந்துவிட்டார், 2ம் பிரதிவாதியின் அம்மா பெயர் அய்யம்மாள் என்பது ஆகும். அ பதிவோட்டில் என்ன இருக்கிறது என்றால் வாதியின் தாத்தா சின்னபையன், எனது பாட்டி அய்யம்மாள் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தனித்தனியாக அ பதிவோட்டில் காட்டப்பட்டிருக்கிறது. எனவே தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

(ஒப்பம்/-த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.